# சீறத்துன்னபி ﷺ

## நாள் 23

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: அல் மிஃராஜ் (விண்ணேற்றம் அல்லது எழுச்சி)
- பகுதி 2: நபிமார்களுடன் சந்திப்பு
- பகுதி 3: ஏழு வானங்கள் மற்றும் இப்ராஹீம் (அலை) உடனான சந்திப்பு
- பகுதி 4: நியாயத்தீர்ப்பு நாள் வருவது பற்றிய உரையாடல்கள்
- பகுதி 5: இப்ராஹீம் (அலை) அவர்களுடன் உரையாடியது மற்றும் அவர்களது ஆலோசனைகள்
- பகுதி 6: மாலிக் (நரகத்தின் பாதுகாவலர்) உடனான சந்திப்பு மற்றும் அவருடன் உரையாடியது
- பகுதி 7: ஸித்ரத்துல் முன்தஹா மற்றும் ஜிப்ரீல் (அலை) அவர்களை அசல் வடிவத்தில் பார்த்தல்

## பகுதி 1: அல் மிஃராஜ் (விண்ணேற்றம் அல்லது எழுச்சி)

மிஃராஜ் பற்றிய நேரடிக் குறிப்பு புனித குர்ஆனில் ஸூரா அந்நஜ்மில் பதிவாகியுள்ளது:

(நபியுடைய) இதயம் அவர் கண்டதைப் பற்றிப் பொய்யுரைக்கவில்லை. ஆயினும், அவர் கண்டவற்றின் மீது, அவருடன் நீங்கள் தர்க்கிக்கின்றீர்களா?

அன்றியும், நிச்சயமாக அவர் மற்றொரு முறையும் (ஜிப்ரீல்) இறங்கக் கண்டார். 'ஸித்ரத்துல் முன்தஹா' (என்னும் வானெல்லையிலுள்ள இலந்தை மரத்து) அருகில். அதன் சமீபத்தில்தான் 'ஜன்னத்துல் மஃவா' (எனும் சுவர்க்கம்) இருக்கிறது.

இலந்தை மரத்தை மூடிக் கொள்ளும் ஒன்று மூடிக்கொண்டபோது. (அவருடைய) பார்வை விலகவுமில்லை; அதைக் கடந்து (மாறி)விடவுமில்லை. திடமாக, அவர் தம்முடைய இறைவனின் அத்தாட்சிகளில் மிகப்பெரியதைக் கண்டார். – (ஸூரா அந்நஜ்ம் (53: 11–18)

- மிஃராஜ் அல்லது விண்ணேற்றம் என்பது நபி (ஸல்) அவர்கள் ஏழு வானங்களுக்கு உடல் ரீதியாக எழுந்ததைக் குறிக்கிறது. மஸ்ஜிதுல் அக்ஸாவில் உள்ள தூணில் இன்னும் கட்டப்பட்டிருந்ததால், புராக் வாகனம் இந்த எழுச்சியின் ஒரு பகுதியாக இல்லை.

- நபி (ஸல்) அவர்களும், ஜிப்ரீல் (அலை) அவர்களும் மேலே ஏறத் தொடங்கினர். அவர்கள் முதல் வானத்தை அடைந்ததும், ஜிப்ரீல் (அலை) சொர்க்கத்தின் கதவுகளைத் திறக்க அனுமதி கேட்டார்கள். கதவின் பின்னால் இருந்த வாயில்காப்பாளர், ''அது யார்'' என்று கேட்டார்



- ஜிப்ரீல் (அலை), ''நான் ஜிப்ரீல்'' என்று பதிலளித்தார். வாயில்காப்பாளர், ''உங்களுடன் யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்டார். ஜிப்ரீல் (அலை), ''ஆம், என்னுடன் முஹம்மது இருக்கிறார்'' என்று பதிலளித்தார்.

- பின்னர் வாயில்காப்பாளர், ''அவர் அனுப்பப்பட்டவரா?'' என்று கேட்கிறார். ஜிப்ரீல் (அலை) ''ஆம்'' என்று கூறுகிறார்கள்; பின்னர் கதவுகள் திறக்கின்றன. நபி (ஸல்) அவர்கள் ஒரு பெரிய மனிதரைக் கண்டார்கள்.

- ஏழு வானங்களிலும் ஒவ்வொன்றாக நுழைவதற்கு முன் அனுமதி பெறும் இந்த சம்பவம், ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கும் ஒவ்வொரு வானத்தின் வாயில் காவலர்களுக்கும் இடையில் நடந்தது.

- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு வானத்திலும் யாரைச் சந்தித்தார்கள் என்பதை தெரிந்துகொள்ளும் முன், நபி (ஸல்) அவர்கள் ஏறிச் சென்ற இந்த ஏழு வானங்கள் எவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

- அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்: ''ஏழு வானங்களையும் (ஸப்–அ–சமாவாத்) படைத்தவன் அல்லாஹ்தான்...'' – (ஸூரா அத்தலாக் (65:12)

- நாம் வசிக்கும் பிரபஞ்சம், தொடர்ந்து விரிவடைந்து கொண்டே இருக்கும் அதன் அனைத்து கிரகங்கள் மற்றும் விண்மீன் திரள்களும், 'ஸமா–அத்–துனியா' அல்லது வானங்களின் கீழ் உள்ள அடிப்பகுதியாக இருக்கிறது.

- அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்: ''திட்டமாக நாமே (பூமிக்குச்) சமீபமாக இருக்கும் வானத்தை (நட்சத்திர) விளக்குகளைக் கொண்டு அலங்கரித்திருக்கிறோம்...'' (ஸூரா அல்முல்க் (67: 5).

- எனவே, நாம் வாழும் பிரபஞ்சம், அதன் அனைத்து கோள்கள் மற்றும் விண்மீன் கூட்டங்களும், வானங்களின் கீழ் உள்ள அடிப்பகுதி ஆகும். அதற்கு மேலே ஏழு வானங்கள் உள்ளன.

- புகாரீயில் குறிப்பிட்டபடி மிஃராஜ் சம்பவத்தில், ஜிப்ரீல் (அலை) ஸமா–அத்–துனியாவை முடிக்கும் வரை தன்னை அழைத்துச் சென்று, பின்னர் முதல் கதவைத் திறக்க அனுமதி கேட்டதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

## பகுதி 2: நபிமார்களுடன் சந்திப்பு

- முதலாம் வானத்தின் வாயில்கள் திறக்கப்பட்டபோது, நபி (ஸல்) அவர்கள் ஒரு பெரிய மனிதரைக் கண்டதைப் பற்றி முன்னர் பார்த்தோம்.

- ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களிடம், ''இவர் உங்கள் தந்தை ஆதம்; இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்'' என்று கூறினார்.

- நபி (ஸல்) அவர்கள் ஸலாம் சொன்னார்கள்; ஆதம் (அலை) அவர்கள், ''நேர்மையான மகனே, நேர்மையான நபியே, வருக!'' என்று பதிலளித்தார்கள்.



- அதற்குப் பிறகு, ஜிப்ரீல் (அலை) அவர்களும், நபி (ஸல்) அவர்களும் இரண்டாவது வானத்திற்குச் சென்று, மற்றொரு வாயில்காப்பாளர் முன்புபோலவே கேள்வி கேட்டபின்னர், அங்கு அவர்கள் யஹ்யா (அலை) அவர்களையும், ஈஸா (அலை) அவர்களையும் சந்தித்தார்கள்.

- நபி (ஸல்), அவர்களுக்கு ஸலாம் சொன்னார்கள்; அவர்கள், ''நேர்மையான சகோதரரே, நேர்மையான நபியே, வருக!'' என்று பதிலளித்தார்கள்.

- மூன்றாவது வானத்தில், நபி (ஸல்) அவர்கள் யூசுஃப் (அலை) அவர்களைச் சந்தித்தார்கள், அதே வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

- இந்தச் சந்திப்பு குறித்துதான், நபி (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களிடம் மிக்க வியப்புடன், உலக மக்களின் அழகில் பாதி அவருக்குக் கொடுக்கப்பட்டது போல் இருந்தது என்று குறிப்பிட்டார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்).

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் நான்காவது வானத்திற்குச் சென்றார்கள். அங்கு இத்ரீஸ் (அலை) அவர்களைப் பார்த்தார்கள்; இதே போன்ற வாழ்த்துகள் பரிமாறப்பட்டன.

- ஐந்தாவது வானத்தில் ஹாரூன் (அலை) இருந்தார்கள்; இதே போன்ற வாழ்த்துகள் பரிமாறப்பட்டன.

- ஆறாவது வானத்தில், நபி (ஸல்) அவர்கள் மூஸா (அலை) அவர்களைச் சந்தித்து வாழ்த்துகள் பரிமாறிக் கொண்டனர்.

- நபி (ஸல்) அவர்கள் மேலும் மேலே ஏறத் தொடங்கியதும், மூஸா (அலை) அவர்கள், ''எனக்குப் பின் அனுப்பப்பட்ட இந்த இளைஞனுக்கு, என் உம்மத்துகளை விட அவருடைய உம்மத்துகள் அதிகமாக சொர்க்கத்தில் நுழைவார்கள்!'' என்று கூறி அழத் தொடங்கினார்கள்.

- நபி (ஸல்) அவர்களுக்கு முன்பு வரை, மூஸா (அலை) அவர்கள், எல்லா நபியையும் விட அதிக உம்மத்துகளை கொண்டிருந்தார்கள். மூஸா (அலை) அழுததன் காரணத்தை விளங்கும்போது, நபிமார்களிடையே ஒரு வகையான போட்டி இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

- ஆனால் அது விரோத போட்டி அல்லது பொறாமை அல்ல, மாறாக அது உணர்வுப்பூர்வமான இரக்கத்தால் நிறைந்தது.

- இன்ஷா அல்லாஹ்! மிஃராஜ் பயணத்தின் தொடர்ச்சியை நாம் பார்க்கும்போது, நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது உம்மத்துகள் மீதும், மூஸா (அலை) கொண்டிருந்த அன்பு, அக்கறை மற்றும் இரக்கத்தை பின்னர் காண்போம்.

## பகுதி 3: ஏழு வானங்கள் மற்றும் இப்ராஹீம் (அலை) உடனான சந்திப்பு

- நபி (ஸல்) அவர்கள் ஏழாவது வானத்திற்குள் நுழைந்தபோது, இப்ராஹீம் (அலை) அவர்கள் அல் பைத்துல் மஃமூரில் முதுகை சாய்த்து அமர்ந்திருப்பதைக் கண்டார்கள்.


- பைத்துல் மஃமூர் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது: ''பைத்துல் மஃமூர் (என்னும் ஆலயத்தின்) மீது சத்தியமாக!'' (ஸூரா அத்தூர் 52: 4).

- இது ஏழாவது ஸமாவில் உள்ள ஆலயம் மற்றும் நபி (ஸல்) அவர்கள் இந்த ஆலயத்தைப் பற்றி கூறியுள்ளார்கள்.

- இது கஃபாவைப் போன்ற ஓர் ஆலயம். அல்லாஹ் படைப்புகளைப் படைத்ததிலிருந்து, ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் மலக்குகள் பைத்துல் மஃமூருக்குள் நுழைந்து தவாஃப் செய்து தொழுகிறார்கள்.

- அந்த எழுபதாயிரம் மலக்குகள் ஒருபோதும் திரும்பி வருவதில்லை, ஒவ்வொரு நாளும் இது நடக்கிறது.

- இப்ராஹீம் (அலை) பைத்துல் மஃமூருக்கு அருகில் ஓய்வெடுக்கிறார்கள் என்பதில் ஒரு அடையாளம் உள்ளது. இந்த உலகில் முதன்முதலில் கஃபாவைக் கட்டியவர், வானத்தின் கஃபாவுக்கு அருகில் காணப்படுகிறார்.



- ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களிடம், ‘‘இவர் உங்கள் தந்தை இப்ராஹீம். இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்’’ என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் ஸலாம் சொன்னார்கள். இப்ராஹீம் (அலை) அவர்கள், ‘‘நேர்மையான மகனே, நேர்மையான நபியே, வருக!’’ என்று பதிலளித்தார்கள்.

## பகுதி 4: நியாயத்தீர்ப்பு நாள் வருவது பற்றிய உரையாடல்கள்

- அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் இரவில், நபி (ஸல்) அவர்கள் பல்வேறு நபிமார்களைச் சந்தித்து சில உரையாடல்களை நிகழ்த்தினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் நிகழ்த்திய இந்த உரையாடல்களை இப்னு மஸ்ஊத் (ரலி)

பின்வருமாறு தெரிவிக்கிறார்.

- நபி (ஸல்) அவர்கள், இப்ராஹீம் (அலை), மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) அவர்களைச் சந்திக்கிறார்கள். அவர்கள் நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

- நியாயத்தீர்ப்பு நாள் எப்போது வரும் என்பது தங்களுக்குத் தெரியாது என்று இப்ராஹீம் (அலை) மற்றும் மூஸா (அலை) கூறினர்.

- ஈஸா (அலை) கூறினார்கள், ''நியாயத்தீர்ப்பு நாளின் அறிகுறி, அதற்கு முன்பு நான் பூமிக்குத் திரும்ப வருவேன் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது''.

- அது எப்போது என்று அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரியும். மற்றொரு அடையாளம் தஜ்ஜால் வருவான் என்பது.

- ஈஸா (அலை) மேலும் கூறினார்கள்: ''நான் தஜ்ஜாலைக் கொல்வேன்; மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள்.

- மேலும், யஃஜுஜ் மற்றும் மஃஜுஜ் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலிருந்தும் வெளிவந்து, அவர்கள் கடந்து செல்லும் அனைத்து நீரையும் குடிப்பார்கள்.

- பின்னர் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வேன். அல்லாஹ் யஃஜுஜ் மற்றும் மஃஜுஜைக் கொல்ல உதவுவான். அவர்களின் சிதைந்த உடல்களால் உலகம் முழுவது துர்நாற்றம் வீசும்.

- பின்னர் அந்த உடல்களை அகற்ற நான் மற்றொரு பிரார்த்தனை செய்வேன். அல்லாஹ் வானத்திலிருந்து மழையை அனுப்புவான். அது உடல்களைக் கழுவிவிடும்.

- இது நிகழும்போது, தீர்ப்பு நாள் பிரசவிக்கவிருக்கும் கர்ப்பிணிப் பெண் எவ்வளவு விரைவில் பிரசவிப்பாளோ அதுபோல – அதாவது தீர்ப்பு நாள் மிக அருகில் இருக்கும்''.

## பகுதி 5: இப்ராஹிம் (அலை) அவர்களுடன் உரையாடியது மற்றும் அவர்களது ஆலோசனைகள்

- மிஃராஜ் பயணத்தின்போது, நபி (ஸல்) அவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்ராஹீம் (அலை), ‘‘யா முஹம்மது (ஸல்) அவர்களே! உங்கள் உம்மத்திற்கு என் ஸலாத்தை உரித்தாக்குங்கள்.

- மேலும் சொர்க்கத்திலுள்ள மண் அழகாகவும், வளமாகவும் இருக்கிறது. ஆனால் அது தரிசாக உள்ளது என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவும். அதன் மரங்கள் ‘சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் மிகத் தூய்மையானவன்)’; ‘அல்ஹம்துலில்லாஹ் (அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்)’, ‘லா இலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை)’ மற்றும் ‘அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்)’ என்று (கூறுவதன் மூலம்) நடப்படுகின்றன’’.



## பகுதி 6: மாலிக் (நரகத்தின் பாதுகாவலர்) உடனான சந்திப்பு மற்றும் அவருடன் உரையாடியது

- அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் இரவில் நடந்த மற்றொரு உரையாடல், நரகத்தின் வாயில்களைக் காக்கும் மலக்கான மாலிக்கைச் சந்தித்தது.

- குர்ஆனில் மாலிக் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘நரக நெருப்பில் வசிப்பவர்கள் (நரகத்தின் தலைமைக் காவலரை நோக்கி): ‘‘மாலிக்கே! உமது இறைவன் எங்களுக்கு (மரணத்தின் மூலமாவது) தீர்ப்பளிக்கட்டும்’’ என்று சப்தமிடுவார்கள்’’.



- ஆனால் அவர் பதிலளிப்பார்; ''இல்லை! நீங்கள் என்றென்றும் இங்கேதான் வாழப் போகிறீர்கள்''. (ஸூரா அஜ்ஜுக்ருஃப் 43:77).

- ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களிடம், ''இவர் நரகத்தின் காவலாளி மாலிக். இவருக்கு ஸலாம் கூறுங்கள்'' என்று கூறினார்கள்.

- எனவே நபி (ஸல்) அவர்கள், அவருக்கு ஸலாம் கூறத் திரும்பினார்கள். ஆனால், அதற்கு முன்பே மாலிக் முதலில் அவர்களை வரவேற்று ஸலாம் கூறினார்.

- மாலிக் சிறிதும் புன்னகை புரியவில்லை; மிகவும் சோகமாகத் தெரிந்தார். இது நபி (ஸல்) அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற மற்ற அனைத்து மலக்குகளின் வரவேற்பிலிருந்து ஒரு பெரிய வித்தியாசமாக இருந்தது.

- நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் இது குறித்து கேட்டதற்கு, ஜிப்ரீல் (அலை), ''அவர் படைக்கப்பட்டு நரகத்தின் வாயில் காவலராக ஆக்கப்பட்டதிலிருந்து அவர் ஒருபோதும் புன்னகை புரியவில்லை அல்லது சிரிக்கவில்லை. நரக நெருப்பைப் பார்த்ததிலிருந்து, அவர் எப்போதும் சோகத்துடனும், உன்னிப்புடனும் காணப்படுகிறார்'' என்று கூறினார்கள்.

- பின்னர் ஜிப்ரீல் (அலை), ''யாருக்காவது அவர் சிரிக்க வேண்டியது இருந்தால், அது உங்களுக்காகத்தான் இருந்திருக்கும்'' என்று கூறினார்கள்.

## பகுதி 7: ஸித்ரத்துல் முன்தஹா மற்றும்

## ஜிப்ரீல் (அலை) அவர்களை அசல் வடிவத்தில் பார்த்தல்

- நபி (ஸல்) அவர்கள் ஏழாவது வானத்திற்கு மேலே சென்றார்கள். அப்போது தனக்கு முன்னால் ஸித்ரத்துல் முன்தஹாவைக் கண்டார்கள்.

- ஸித்ரா என்பது பெரிய கிளைகளும், சுவையான பழங்களும், மணம் இனிமையாகவும் இருக்கும் மரமாகும்.

- முன்தஹா என்றால் கடைசியில் என்று பொருள். எனவே அது எல்லையில் உள்ள மரம்.

- ஒரு அறிவிப்பில், மரத்தின் தண்டு ஆறாவது வானத்திலிருந்து தொடங்கி, மரத்தின் இலைகள் ஏழாவது வானத்தில் முடிவடைகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்த மரத்தின் பழங்கள் மிகப்பெரிய ஜாடிகளைப் போல மிகப் பெரியவை; அதன் இலைகள் யானையின் காதுகள் போன்றவை.

- மரத்தின் நிறங்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்ததால், நபி (ஸல்) அவர்களால் வண்ணங்களை விவரிக்க முடியவில்லை.



- எப்போதும் வண்ணங்களும், அமைப்புகளும் மாறிக்கொண்டே இருக்கும் ஒரு துடிப்பான மரம். மேலும் மரத்தைச் சுற்றி தங்க நிற பட்டாம்பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன.

- பூமியிலிருந்து எழும் அனைத்தும் ஸித்ரத்துல் முன்தஹாவில் முடிவடைகின்றன. உலகத்திலிருந்து மேலே எழும் நற்செயல்கள், பிரார்த்தனைகள் மற்றும் துஆக்கள் எல்லாம் அங்கேயே நின்று, மரத்தால் உறிஞ்சப்படுகின்றன என்பதை நாம் ஊகிக்க முடியும்.

- மேலும், இந்த மரத்திலிருந்து பூமிக்கு வருவது மழை, ஆசீர்வாதங்கள் மற்றும் அல்லாஹ்வின் ரஹ்மத் மற்றும் அல்லாஹ்வின் ஆணை.

- ஸித்ரத்துல் முன்தஹாவின் அடிவாரத்தில், நான்கு ஆறுகள் கீழே ஓடுகின்றன. அவற்றில் இரண்டு மறைக்கப்பட்டுள்ளது; இரண்டு திறந்திருக்கிறது.

- இரண்டு மறைக்கப்பட்ட ஆறுகள் சொர்க்கத்தில் உள்ளவை என்றும் அவை அல்கவ்ஸர் (ஸூரா அல்கவ்ஸர் 108:1) மற்றும் ஸல்ஸபீல் (ஸூரா அத்தஹ்ர் 76:18) என்றும் ஜிப்ரீல் (அலை) விளக்கினார்கள்.

- மற்ற இரண்டு ஆறுகள் நைல் மற்றும் யூப்ரடீஸ், அதாவது இவை இரண்டும் ஆசீர்வதிக்கப்பட்ட ஆறுகள். பாரம்பரியமாக, சிறந்த நாகரிகங்களின் தொட்டில் என்று அழைக்கப்படும் நாகரிக, கலாசாரங்கள் இந்த இரண்டு நதிகளின் கரையில் இருந்துதான் வந்தது.

- இதற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை அவரது அசல் வடிவத்தில் கண்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை 600 இறக்கைகள் கொண்டவராகவும், அவர் முழு அடிவானத்தையும் மறைத்ததாகவும் விவரிக்கிறார்கள்.

- ஜிப்ரீல் (அலை) இறகுகளிலிருந்து, முத்துக்கள் மற்றும் பவளங்கள் சொட்டிக் கொண்டிருந்தன.

- நபி (ஸல்) அவர்கள் ஸித்ரத்துல் முன்தஹா, பைத்துல் மஃமூர் மற்றும் அசல் வடிவத்தில் இருந்த ஜிப்ரீல் (அலை) ஆகிய அனைத்தையும் கண்டபோது நடந்த இந்த சம்பவங்களை அல்லாஹ் குர்ஆனில் விவரிக்கிறான்:

''மேலும் அவர் (முஹம்மது நபி (ஸல்)) தனது ரப்பின் சில சிறந்த அடையாளங்களைக் கண்டார்'' (ஸூரா அந்நஜ்ம் 53:18).